பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
The EELA NADU

மலர் 1[illegible] சித்திரை 8 [illegible] 30 இதழ்-68
யாழ்ப்பாணம் புதன்கிழமை 20-4-77

# மருந்தாளர் சட்டப்படி வேலை தினமும் நோயாளர் அவதி!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மருந்தாளர்கள் சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தில் ஈடுபட்டிருப்பதால் கடந்த ஒருவாரகாலமாக நோயாளர்களுக்கு மருந்து வழங்கப்படவில்லை. இதனால் தினமும் இங்குவரும் ஆயிரக்கணக்கான நோயாளர் ஏமாற்றத்துடன் விடுதிரும்புவதுடன், மருந்தின்றி பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் தனியார் மருந்துச் சாலைகளில் மருந்தைப் பெற்றுச் செல்கின்றனர்.

சுகாதார அமைச்சின் சட்டதிட்டத்தில் உள்ள பிரகாரம் மருந்துப் போத்தலில் ஒட்டிக் கொடுக்கும் 'லேபல்' மருந்துக் குளிகைகளைச் சுற்றிக் கொடுக்கும் மருந்துப்பிரமாணங்கள் அச்சடிக்கப்பட்ட புதிய 'கவர்' மருந்தாளர்களுக்கு கோல உடை போன்ற கோரிக்கைகளுடன் சம்பள முரண்பாட்டுக் கமிஷன் அறிக்கையின் சிபார்சை நடைமுறைப்படுத்துதல், அடிப்படைச் சம்பள உயர்வு, விகிதாசாரப்படி பதவி உயர்வு வழங்கல், லீவுநாட்களில் வேலை செய்வதற்கு மேலதிக வேதனம் போன்ற பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தச் சட்டப்படி வேலைசெய்யும் இயக்கம் நடக்கிறது.

கதிரியக்க நுண்ணியலாளர்கள் ஆய்வுகூடதொழில் நுட்பவியலாளர்கள் இயன் மருத்துவர்கள் ஆகியோரும் இந்தச் சட்டப்படி வேலை இயக்கத்தில் ஈடுபட்டுள்ளனர். அகில இலங்கை ரீதியில் இந்தச் சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் நடக்கிறது.

கடமைக்குத் தேவையான முக்கிய பொருட்கள் இல்லை என்ற கோரிக்கையின் மீது மருந்தாளர்கள் நோயாளருக்கு மருந்து கொடுக்கும் வேலையை முற்றாக நிறுத்தியுள்ளனர். லேபலில் மருந்துப்பிரமாண விபரங்களை எழுதிக் கொடுப்பதற்கு பென்சிலும் கேட்டு இந்த சட்டப்படி இயக்கம் நடக்கிறது.

டாக்டர்கள் மருந்துக்கான துண்டுகளை எழுதிக்கொடுக்கின்ற போதிலும் மருந்துச் சாலையில் மருந்து வழங்கப்படாததால் நூற்றுக்கணக்கான அப்பாவி நோயாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். (வண்-ஆ)

# சுயாட்சிக்கழகம் 2 தொகுதிகேட்கிறது

## "கருத்து வேறுபாடு கூட்டணியை குலைக்காது"

யாழ்ப்பாணம், புதன்

தேர்தலில் வேட்பாளர்களை நியமிப்பது தொகுதிகளைத் தெரிவுசெய்வது சம்பந்தமாகத் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் கருத்து வேறுபாடு தோன்றியுள்ள போதிலும் கூட்டணிக்குள் பிளவோ பிரிவினையோ ஏற்படாமல் சமாளிப்பதில் கூட்டணித் தலைவர்கள் தொடர்ந்து முயற்சிசெய்துவருகின்றனர். "எல்லாப் பிரச்னைகளும் சுமுகமாகத் தீரும். கூட்டணிக்குள் வேறுபாடு ஏற்படமாட்டாது" என்று கூட்டணிப் பிரமுகர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தெரிவித்தார்.

தமிழர் சுயாட்சிக் கழகத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்குமிடையில் நடைபெற்ற முதல்கட்ட பேச்சுவார்த்தை சுமுகமான முறையில் நடைபெற்றது.

வடக்கிலுள்ள பதினைந்து தொகுதிகளில் ஏழு தொகுதிகளைத்தங்களுக்கு ஒதுக்கவேண்டுமெனத் தமிழ்க்காங்கிரஸ்கேட்கும்போது அடிப்படையில் ஒரேஇலட்சியத்தைக்கொண்ட தமிழர் சுயாட்சிக் கழகத்துக்கு இரண்டு தொகுதிகளாவது ஒதுக்குவதில் என்ன தவறு என்று கழகப்பிரமுகர் ஒருவர் பேச்சுவார்த்தையின் போது கேட்டதாகத் தெரிகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் தெரிவுக்குழு இம்மாதம் 22-ந் தேதி கொழும்பில் திரு. மு. சிவசிதம்பரத்தின் இல்லத்தில்கூடி வேட்பாளர்பற்றி இறுதித் தீர்மானம் மேற்கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

# உடுப்பிட்டியில் தான் 'சிவா' கேட்பார்

## இல்லையேல் போட்டியிடமாட்டார்

யாழ்ப்பாணம், புதன்

சுகவீனம்காரணமாக தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், அவரது சொந்த தொகுதியான உடுப்பிட்டித் தொகுதியை தவிர வேறுஎந்த தொகுதியிலும் போட்டியிடமாட்டார்.

தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தான் சுகவீனமாக இருப்பதாகவும், தளர்ந்தநிலையில் இருப்பதாகவும், இந்தநிலையில் உடுப்பிட்டித் தொகுதியை தவிர வேறு தொகுதியில் போட்டியிட முடியாதநிலையில் இருப்பதாகவும். திரு. சிவசிதம்பரம் தமக்கு தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

உடுப்பிட்டித் தொகுதியை விட்டு வேறு தொகுதியில் போட்டியிடுமாறு கூட்டணி நியமனக்குழு தீர்மானித்தால் தாம் போட்டியிடமாட்டார் என்றும் திரு. சிவசிதம்பரம் பூரண ஓய்வு எடுக்குமாறு டாக்டர்கள் ஆலோசனை வழங்கியிருப்பதால், உடுப்பிட்டி தொகுதியை தவிர, புதிய ஒரு தொகுதியில் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபடக்கூடிய நிலையில், அவர் இல்லை என்றும் திரு. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

இவ்விஷயம், கூட்டணி நியமனக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுமென்றும், அவர் தெரிவித்தார். (க)

## "காங்கிரஸ் பொதுச்சபையை இருவாரத்தில் கூட்டுக" இணைச் செயலாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

தேர்தல் தொடர்பான விஷயங்கள்பற்றி ஆராய்வதற்கும், தொகுதி ஒதுக்கீடுபற்றிய கருத்தை அறிவதற்கும், இரண்டு வாரகாலத்திற்குள் தமிழ்க்காங்கிரஸ் பொதுச்சபையைக்கூட்டுமாறு தமிழ்க்காங்கிரஸ்இணைச செயலாளரான திரு. ரி. பரமானந்தராசா நேற்றுத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. தா. சிவசிதம்பரத்திற்கு அனுப்பியுள்ள தந்தியில் கேட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் தொகுதிரீதியாகக் காங்கிரஸைப் புனரமைப்புச்செய்து கிளைகள் அமைப்பது பற்றியும், ஆலோசிக்கப்படவேண்டும் என்றும் தந்தியில் கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைமைக்காரியாலயம் நிறுவுவதுபற்றியும், கட்சிப் பத்திரிகையொன்று ஆரம்பிப்பது பற்றியும், இக்கூட்டத்தில் முடிவுசெய்யவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (க-அ)

## சம்பள முரண்பாட்டைத் தீர்க்க அமைச்சு சம்மதம்

கொழும்பு, புதன்

சட்டப்படி வேலை இயக்கத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களை உடனடியாக வழமையான வேலைக்குத் திரும்புமாறு சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது. சம்பள முரண்பாட்டிற்குழுவின் சிபார்சில் தெரிவிக்கப்பட்ட சம்பளத்திட்டத்தை 1975-ம் ஆண்டு ஏப்ரல் 1 ம் திகதியிலிருந்து அமுல் நடத்த நடவடிக்கை எடுக்க சுகாதார அமைச்சு இன்று சம்மதம் தெரிவித்தது. இதனால் சட்டப்படி வேலையைக் கைவிடுமாறு அறிக்கை மூலம் கேட்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் ஏனைய கோரிக்கைகள் சம்பந்தமாக சுகாதார அமைச்சில் இன்று (புதன்) காலை மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. (ஆ)

அளவெட்டி சூட்டுச் சம்பவம்:

# இருவர் கைது: 5 பேர் தலைமறைவு

யாழ்ப்பாணம், புதன்

அளவெட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றஇரட்டைக் கொலை சம்பந்தமாக சுன்னாகம் 'பொலிசார் இருவரைக் கைது செய்துள்ளனர்.' இது சம்பந்தமாக மேலும் ஐவரைப் பொலிசார் தேடுகிறார்கள்.

அளவெட்டியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ராமலிங்கம் சண்முகம் (35 வயது), மாணிக்கம் மகேந்திரன் (26 வயது) ஆகிய இருவருமே கொல்லப்பட்டவர்களாவர்'

எம். தெய்வேந்திரம், எஸ். செல்வநாயகம் செல்லன் அரசக்கோன் ஆகிய மூவரும் காயமுற்று தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக சுன்னாகம் பொலிசார் வி. கந்தையா, வி. அழகநாயகம் அல்லது பேபி இருவரின் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். மேலும் செல்லத்துரை செல்லத்தம்பி, பண்டாரி கந்தையா, கிட்லர் துரைராசா, பண்டாரி சின்னையா, அப்புத்துரை ராசதுரை ஆகியோரைத் தேடுகிறார்கள்.

(6-ம் பக்கம் பார்க்க)

## மூதறிஞர் உடல்நிலை

யாழ்ப்பாணம், புதன்

மூதறிஞர் செல்வநாயகத்திற்கு இரண்டாவது அறுவைச் சிகிச்சைக்குப்பின்னர்சிறிதளவு முன்னேற்றமடைந்துள்ளதாக

(6-ம் பக்கம் பார்க்க)

## உணவுவகை விலை குறைக்க ஹோட்டல்காரர் சம்மதம்

கொழும்பு, புதன்

உணவு வகைகளின்விலைகளை உடனடியாக 10 சத விகிதத்தால் குறைப்பதற்கு ஹோட்டல் உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். உணவு அமைச்சில் நடைபெற்ற மாநாட்டில் இந்த இணக்கம் ஏற்பட்டது.

விலைகுறைப்பு சம்பந்தமான பட்டியலை பகிரங்கப்படுத்தவும் உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்தனர்,

இறக்குமதி செய்யப்படும் சஞ்சிகை, புத்தகம், பத்திரிகை போன்றவற்றின் விலைகளைக் குறைக்கவும் இறக்குமதியாளர் சம்மதம் தெரிவித்துள்ளனர். (ஆ)

## வல்வெட்டியில் படுகொலை!

யாழ்ப்பாணம், புதன்

வல்வெட்டியில் நேற்றுநடைபெற்றதாக்குதல் சம்பவமொன்றில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார். எஸ். ஐயாத்துரை (வயது 65) என்பவரே கொலையுண்டவராவர். விசாரணை தொடர்கிறது. (ஆ)

### மணிவாக்கு

பெண் துணையற்றவளல்ல. அவள் தன்னை மனிதனிலும் பலங்குறைந்தவளென்றெண்ணிவிடக்கூடாது. ஆகையால், அவள் மனிதனது கருணையைப் பெறுவதற்கு இரத்தலும் ஆகாது, அவனில் தங்கியிருக்கவும் கூடாது.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANADU

## சீதன ஒழிப்பு

சீதனமுறையை ஒழித்துக்கட்டுவதற்கு இலங்கையிலுள்ள இஸ்லாமியப் பெண்கள் நாடுமுழுவதும் இயக்கம் ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இஸ்லாமியப் பெண்கள் அங்கம்வகிக்கும் பதினேழு சங்கங்கள் கடந்த வாரம் கொழும்பில்கூடி சீதனமுறையை ஒழிப்பதற்கு இயக்கம் ஆரம்பிப்பதென்று ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றன.

பொதுவாகஇஸ்லாமியப் பெண்கள் இதுபோன்ற இயக்கங்களுக்கு முன்னணியில் நிற்பதில்லை.

இன்று துணிச்சலுடன் சமூகக்கொடுமையொன்றை ஒழித்துக்கட்டுவதற்கு முன்வந்துள்ளனர்.

இந்த முடிவை மேற்கொண்ட இஸ்லாமியப் பெண்களைப் பாராட்டினால் மட்டும் போதாது; அவர்களது இயக்கத்துக்குப் பூரணஉதவியும் ஒத்துழைப்பும் அளிக்கவேண்டியது நாட்டுமக்களின் கடமையாகும்.

தமிழ்ச் சமூகத்தில் தீண்டாமையும் சீதனமுறையும் இருபெரும்சாபக்கேடுகளாக விளங்குகின்றன.

தமிழ்ச் சமூகமும் தமிழ்ப் பிரதேசங்களும் பொருளாதாரத்துறையில் முன்னேற முடியாமலிருப்பதற்குச் சீதனமுறையே பெரிதும் காரணமாயிருக்கிறதென்று சொல்லலாம்.

உயர்ந்த உத்தியோகத்துக்குப் பெரியதொகை, சிறிய உத்தியோகத்துக்குச் சிறிய தொகை என்று சீதனத்திலேயே வர்க்கபேதம் வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

நிலைமை மாறுவதற்குப் பதிலாக இப்போது 'லண்டன் மாப்பிள்ளைக்கு' இவ்வளவு; உள்ளூர் மாப்பிள்ளைக்கு அவ்வளவு என்று புதிய விகிதம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது.

பெண்ணைக் கட்டும் மாப்பிள்ளைக்கு இவ்வளவு தொகை சீதனமென்றால் மாப்பிள்ளையின் தந்தை அல்லது சகோதரனுக்கு 'டொனேஷன்' என்னும் பெயரால் வேறுஒருதொகையைப் பெண்ணைப்பெற்ற குற்றத்துக்காக பெண்ணின் தந்தை கொடுத்தாகவேண்டும்!

சீதனப்பணம் பெரும்பாலும் தங்கள்பிள்ளைகளின் சீதனத்துக்காக ஒதுக்கி வைக்கப்படுவதுமுண்டு.

கைத்தொழில்களில், விவசாயத்தில் முதலீடுசெய்து பொருளாதாரத்தை அதிகரிப்பதற்கு உதவக்கூடிய பெரும் மூலதனம் சீதனம் என்ற பெயரால் முடங்கிக் கிடக்கிறது.

சீதனத்துக்காகவே பணத்தைச் சேர்த்து முடக்கி வைப்பதால் தமிழ்ச் சமூகத்தினதும் தமிழ்ப்பகுதிகளினதும் பொருளாதாரம் முன்னேற முடியாமலிருக்கிறது.

இதுதவிரப் பணத்தைச் செலவழித்துப் படித்த பெண்கள் பலரும்கூட சீதனக்கொடுமையால் வீட்டுக்குள்கிடந்து நெடுமூச்சுவிடும் கொடுமையை இன்றும் காணலாம்.

இந்தியாவில் சீதனமுறை முற்றாக ஒழியவில்லை என்பது உண்மையே. ஆனாலும் அது வெகுவாகக் குறைந்துள்ளதென்று சொல்லமுடியும்.

சீதனஒழிப்புக்கு இந்தியாவில் சமூக, சமய ஸ்தாபனங்கள் பலவும் இயக்கம் நடத்திவருவதுடன் அரசாங்கமும் இந்த இயக்கத்துக்கு ஆதரவு கொடுக்கின்றது.

அரசியல் கட்சிகளும் சீதனமுறை ஒழிப்புக்கு ஆதரவு அளிக்கின்றன.

நமது நாட்டில் சீதனக்கொடுமையைப்பற்றிப் பலரும் பலதடவைகளில் எடுத்துச் சொல்லியிருப்பது உண்மைதான்.

சிலசமயங்களில்சிலஇடங்களில் சீதன ஒழிப்பு இயக்கம் தொடங்கப்பட்டு இயங்காமல் போயிருக்கின்றன.

சீதனக் கொடுமையால் தற்கொலைசெய்த சம்பவங்களின்போது மரண விசாரணை அதிகாரிகள் சீதனக்கொடுமைபற்றி உருக்கமாகக் கருத்துத் தெரிவித்ததுண்டு; இதைக்கேட்டுக் கண்கலங்கியவர்களுமுண்டு.

ஆனால் எமதுநாட்டில் அரசியல் இயக்கங்கள் சீதன ஒழிப்புக்கு மனப்பூர்வமாக ஆதரவு கொடுக்கவில்லை. இன்றும்கூட அதற்குத் துணியவில்லை.

இந்தியாவில் விடுதலைப் போராட்டத்துக்கு காந்திமகான் வகுத்த நிர்மாணத் திட்டத்தில் சீதன ஒழிப்பும் ஒன்று.

அவரது திட்டம் தேசபக்தியைஊட்டி போராட்டத்தை வலுப்படுத்தி நாட்டுக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுத்தது.

ஈழம்வாழ் தமிழ்மக்கள் உரிமைப் போராட்டத்தில் பொறுத்தகட்டத்துக்கு வந்துள்ளார்கள்.

இந்நிலையில் சீதனஒழிப்பு தமிழ்மக்கள் மத்தியில் ஒற்றுமையை வலுப்படுத்தவும் உதவும்.

தமிழ்த்தலைவர்களும் கட்சிகளும் சீதனஒழிப்பில்இனியும் அசமந்தமாயிருப்பது நல்லதல்ல.

இதேசமயம் தமிழ்ப் பெண்களும் சீதன ஒழிப்புக்குப் போர்க்கொடி உயர்த்தும் இஸ்லாமியப் பெண்களுடன் சேர்ந்து போராடுவது தமிழ்பேசும்மக்களின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் வழிவகுக்கும்.

### சந்திரசேகரப் பிள்ளையார் உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

சுன்னாகம் ஸ்ரீசந்திர சேகரப் பிள்ளையார் கோவில் பிரதம மஹோற்சவத்தை எதிர்வரும் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெற இருக்கும் துவஜாரோகண வைபவத்துடன் பிரதிஷ்டா சிரோமணி சுவாமி விஸ்வநாதக் குருக்கள் ஆரம்பித்து வைக்கிறார். மலேஷியா சிங்கையில் பலமத வைபவங்களை நடாத்தி வைத்துவிட்டு அண்மையில் தாயகம் திரும்பி உள்ள குருக்கள் இலங்கை வந்தவுடன் நடாத்த இருக்கும் முதல் சமய வைபவம் இந்நிகழ்ச்சியாகும். விழாக்காலங்களில் ஸ்ரீலஸ்ரீபரமாசாரிய சுவாமிகளின் கதாகாலட்சேபம் இடம்பெறும். (அ)

"ஐ. தே. க. பதவிக்குவந்தால்

# ஒரு லட்சம் புதிய வீடுகள்

## 6 லட்சம் வாலிபருக்கு வேலை"

கொழும்பு, செவ்.

'ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு வந்ததும், ஒரு லட்சம் வீடுகளைப் புதிதாக அமைக்கவிருக்கிறது. இவ்வீடுகளை அமைக்கும் வேலைகளில் சுமார் ஆறு லட்சம் வாலிபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.'

கொழும்பு மத்தி எம். பியும் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவருமான திரு. ஆர்.பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு. பிரேமதாசா மேலும் தெரிவித்திருப்பதாவது: 'நாம் ஆட்சிக்கு வந்தால் இந்த மிகப் பெரிய வீடமைப்புத் திட்டத்தை நகரங்களிலும் கிராமங்களிலும் அமுல்செய்வோம்.

'இத்திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்குச் சுகாதார வசதிகளைக் கொண்ட வீடுகள் கிடைக்கும்.

50,000 வீடுகள் நகரப் பகுதிகளிலும், மற்றும் 50,000 வீடுகள் கிராமப் பகுதிகளிலும், அமைக்கப்படும். (க-அ)

### வெள்ளெருவை பிள்ளையார் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் தெற்கு வெள்ளெருவை ஸ்ரீ சித்திவிநாயகர் பெருஞ்சாந்தி குடமுழுக்கு வைபவம்அடுத்தமாதம்5ம்திகதி நடைபெறஇருக்கிறது. மேற்படி ஆலய பிரதம குருக்கள் நீ. சச்சிதானந்தக்குருக்கள் தலைமையில் நடைபெற இருக்கும் இவ்வைபவத்தில் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும்இடம்பெறும். (அ)

......

### இன்று

யாழ்ப்பாணம்,புதன்

வண்ணை சிவன்கோயிலில் கார்த்திகைவிரமாகிய இன்று மாலை 6.15மணிக்கு சுப்பிரமணியப்பெருமானுக்கு விசேபூஜையும் இரவு 7மணிக்கு வசந்த மண்டப பூஜையும் முருகப் பெருமான் மயில்வாகனத்தில் உள்வீதிவலம் வருதலும் நிகழும்.

ஃ ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம்'புதன்

அரியாலை ஸ்ரீஞானவைரவர் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகிறது. 29 ம் திகதி வெள்ளிக்கிழமை பகல் சங்காபிஷேகமும் இரவு 8 மணிக்கு வசந்தமண்டபப்பூஜை நடைபெற்று வைரவப்பெருமான் தெருவிதி உலாவருதலும் இடம் பெறும். 30 ம்திகதி திருக்குளிர்த்தி அபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும். (அ)

......

### போனஸ் வழங்கினர்

நெல்லியடி, செவ்வாய்

பருத்தித்துறை புலோலி தெற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க சீவல் தொழிலாளர்களுக்குப் புதுவருடப் பரிசாக போனஸ் பனம் வழங்கப்பட்டது.

இச்சங்கத்தின் விசேஷ கூட்டம் பருத்தித்துறைசித்தி விநாயகர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது சுமார் 25ஆயிரம் ரூபாய் 400 சீவல் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு இவ்வருடம்தான் சீவல் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

......

### 1கோடி 20லட்சம் புசல் நெல் அறுவடையாகும்?

கொழும்பு, செவ்வாய்

மகாவலி நீர் மூலம் பெரும்போகத்தின்போது 1லட்சம் 50ஆயிரம் ஏக்கர் காணியில் நெற்செய்கை நடைபெற்றது.

இதன் மூலம் 1கோடி 20லட்சம் புசல் நெல் அறுவடை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

### இந்துமாமன்றம்

## ஆனிஉத்தர இந்திய யாத்திரை நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

எதிர்வரும் ஜூன் 23-ம், 24-ம் திகதிகளில் இந்தியாவில் நடைபெறவிருக்கும் ஆனி உத்தரத்தில் 50யாத்திரிகர்களுக்கு இந்தியா செல்லும் வசதியை செய்து கொடுக்க அகில இலங்கை இந்துமாமன்றம் அரசாங்கத்தின் அனுமதியைக் கோரியுள்ளது.

இவ்வசதியைப் பயன்படுத்தி இந்திய யாத்திரை செல்ல விரும்புவோர் தெரிவு பெறுவதற்கு கொண்டிருக்க வேண்டியதகைமைகள்குறித்து இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த ஏழு ஆண்டுகளில் இந்திய யாத்திரை சென்றிராதோர், விண்ணப்பகாரருக்கு யாத்திரைக்காக உதவி செய்ய வெளிநாடுகளில் சொந்தக்காரரோ, சிநேகிதரோ இல்லாதோர், இந்தயாத்திரை பெறத்தகைமையுடையவர் என்று தெரிவிக்கப்படுகிறது. வயது முதிர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும் எக்காரணம் கொண்டும் ஜூன் 20-ம் திகதிக்குப் பின் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் செலவாணிக் கட்டுப்பாட்டதிகாரியின் அனுமதி நழங்கப் கடிதம் மட்டும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு அனுப்பப்படுமென்றும் யாத்திரிகர்கள் தாமாகவே பிரயாண ஒழுங்குகளையும் மற்றும் தேவைகளையும் செய்து கொள்ளவேண்டுமென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விண்ணப்ப இறுதித் திகதி மே மாதம்16-ம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டது.

சென்ற ஆண்டில் மார்கழித் திருவாதிரையின் போது அரசாங்க அனுமதியோடு வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்ற 60யாத்திரிகர்களுக்கு சிதம்பர நடராஜனின் ஆர்த்திரா தரிசனமும் ஏனையஆலய தரிசனங்களும் பெற மேற்படி மன்றமும் உதவியது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

"உலக நாடுகளில்

## தொழிலாளர் இயக்கங்களின் சாதனைகள் அளப்பரியன"

மாவிட்டபுரம், செவ்

"தொழிலாளர் இயக்கம் சக்திவாய்ந்தது. உலகநாடுகளிலே தொழிலாளர் இயக்கங்கள் புரியும் சாதனைகள் அளவிடற்கரியன. தொழிலாளர்களது உரிமையைத்தர மறுக்கும் எந்த ஒரு நிர்வாகமும் தொடர்ந்து இயங்கமுடியாது. ஆகவே இன்று நாம் விடுக்கும் கோரிக்கைக்கு நிர்வாகம் செவிசாய்க்கும் நாள் அதிக தூரத்திலில்லை. அதுவரை எமது போராட்டம் தொடர்ந்து நடைபெறும்".

இவ்வாறு நேற்று நடைபெற்ற காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளரின் அடையாள வேலை நிறுத்தத்தையொட்டி நடந்த கூட்டத்தில் பேசிய தொழிற்சங்கக் கூட்டுக் குழுத் தலைவரும் சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் தலைவருமான திரு.ச.கணபதிப்பிள்ளை கூறினார்.

சிமெந்துப் பொதுத்தொழிலாளர் யூனியன்வளவில்நடந்த இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"இன்று நடைபெறும்அடையாள வேலைநிறுத்தத்துடன் எமது போராட்டம் முடியவில்லை. சட்டப்படி வேலைஇயக்கம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள போதிலும் தக்க சமயத்தில் அந்த ஆயுதமும் உபயோகிக்கப்படும்."

"எமது வேலைநிறுத்தத்திற்குப் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை கடதாசி ஆலை ஆகியவற்றில் உள்ள தொழிற்சங்கங்களிடமிருந்தும், வேறுபல தொழிற்சங்கங்களிடமிருந்தும் ஆதரவு தெரிவித்துக் கடிதங்கள் வந்துள்ளன. ஆகவே எமது உரிமையைவென்றெடுப்பதில் நாம் ஒற்றுமையாக செயல்படவேண்டும்".

தொழிற்சங்கக் கூட்டுக்குழு காரியதரிசி திரு. து.கனகசபை பேசுகையில், 'ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்குக்கூட ஓய்வுகால நன்கொடை வழங்க முன்வந்துள்ள அரசாங்கம் தொழிலாளர்களுக்கு மட்டும் ஓய்வுகால நன்கொடைவழங்கமறுப்பது ஏன்என்பதுதெரியவில்லை. தொழிற்சாலை இயந்திரங்களுடன் தினமும் போராடி தமது இரத்தத்தையே வியர்வையாகச் சிந்தும் தொழிலாளர்களுக்கு ஓய்வுகாலநன்கொடை கட்டாயம் வழங்கப்படவேண்டும். சீமெந்துத்தூசியை தினமும் சுவாசித்துத் தமது வாழ்நாளே அதனால் குறுகுகிறது என்பதையும் மறந்து தொழில் புரியும் தொழிலாளர்களதுஉரிமைகளை வழங்க அரசு தயங்கினால் அவர்களது போராட்டம் தவிர்க்கமுடியாதது.

ஐக்கிய அரசாங்கக் கூட்டுத்தாபன வர்த்தக ஊழியர் சங்கக் காரியதரிசி திரு. க. சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:

இத்தொழிற்சாலையில் வழங்கப்படும் சம்பளம் தொழிலாளர்கள் தமது உயிரைப் பாதுகாப்பதற்குப் போதுமானதே தவிர வாழ்க்கை நடத்தப் போதுமானதல்ல. தொழிலாளர்களது உழைப்பால் பெறப்படும் வருமானத்தில் தொழிலாளர்களுக்குச் சம்பளஉயர்வு வழங்குவதில் கஷ்டமிருக்கமுடியாது.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த இ.செல்வநாயகம், நிறைவேற்று உத்தியோகத்தர்சங்கத்தைச் சேர்ந்த திரு.செல்வரத்தினம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தொழிற்சங்கத்தைச் சேர்ந்த திரு. வி. இரத்தினராசா உத்தியோகத்தர்கள் சங்கத்தைச் சேர்ந்த திரு. சி. சுந்தரலிங்கம், பாரவாகன இயக்குநர் சங்கத்தை சேர்ந்த இ. நரசிங்கம் மற்றும் திரு. ஸ்ரீஸ்கந்தராசா, திரு. கதிரவேலு உட்படப் பலர் உரையாற்றினர். (அ)

# "என்மீதுயாரும் ஆதிக்கம் செலுத்தமுடியாது" - பூட்டோ

## பேச்சுவார்த்தை அழைப்பை எதிர்க்கட்சிகள் நிராகரித்தன

லாகூர், ஏப். 19

நாட்டில் கொந்தளிப்பு நிலை நீங்கி, சௌஜன்ய நிலை மீண்டும் மலரதம்முடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு பாகிஸ்தான்பிரதமர் சுல்பிகார்அலிபூட்டோ விடுத்த கோரிக்கையை பாகிஸ்தான் எதிர்க்கட்சிகள் நிராகரித்து விட்டன.

பிரதமர் பூட்டோ உடன் பதவியிலிருந்து ராஜினமாச் செய்யவேண்டும், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நேர்மையான விதத்தில் நடத்சப்பட வேண்டும் என்ற தமது கோரிக்கையை எதிர்க்கட்சிகள் மீண்டும் வலியுறுத்தியுள்ளன.

### மேலும் எண்மர் பலி

பாகிஸ்தானில்லாகூர்,ராவல்பிண்டி முதலான பகுதிகளில் நேற்று நடைபெற்ற அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் மேலும் எண்மர் கொல்லப்பட்டனர் என்றும் பலர் காயமுற்றனரென்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட பிரதமர் பூட்டோவின் ஆளும்கட்சியைச் சேர்ந்த நான்கு பிரதிநிதிகளின் தெரிவு செல்லுபடியாகாது என்று பாகிஸ்தான் தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருப்பது தெரிந்ததே.

### பூட்டோ விளக்கம்

லாகூர், ஏப்.19

"நான்இராணுவத்தின் நிர்ப்பந்தத்தின் கீழ் ஆட்சி புரிகிறேனு? எதிர்க்கட்சியினரின் அபாண்டமான குற்றச்சாட்டு இது "என்று பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலிபூட்டோ தெரிவித்துள்லார்.

லாகூரில் செய்தி நிருபர்கள் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது; "என் மீதுயாரும் ஆதிக்கம் செலுத்த நான் இடமளிக்க மாட்டேன் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கவிரும்புகிறேன்"

பொதுக் கூட்டங்கள் நடைபெறுவதற்கு தடை விதித்துள்ள பூட்டோ அரசாங்கம் நிர்வாகத்திலும் மாற்றம் செய்யவிருக்கின்றது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)

# டாக்டர் ஹண்டே ஜ. காங்கிரஸில் சேர்ந்தார்

## ஜனநாயகத்தை காக்கும கட்சி இதுவே என்கிறுர்

சென்னை, ஏப். 19

டாக்டர் எச்.ஆர்.ஹண்டே நேற்று திரு. ஜெகஜீவன் ராம் தலைமையிலான ஜனநாயகக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துகொண்டார்.

மூதறிஞர் ராஜாஜியின் சுதந்திரக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த டாக்டர் ஹண்டே ராஜாஜி காலமாகிய சில ஆண்டுகளின் பின் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அனைந்திந்திய அண்ணு தி. மு. கழகத்தில் சேர்ந்து பின் ஸ்தாபனகாங்கிரசில் சேர்ந்திருந்தார்.

நேற்று அக்கட்சியிலிருந்து ராஜினுமாச்செய்து ஜனநாயக காங்கிரஸ் கட்சியில் அவர் சேர்ந்துள்ளார்.

### ஜனநாயகக் காங்கிரசில் சேர்ந்தது ஏன?

தாம் அக் கட்சியில் சேர்ந்தது பற்றி அவர் சென்னையில் வெளியிட்ட அறிக்கையொன்றில், "நாட்டில்தேசிய ஒருமைப்பாட்டைக் காத்து, ஜனநாயக முறைகளை செயற்படுத்தக்கூடிய கட்சி ஜனநாயக காங்கிரஸே என்றபடியால் அக் கட்சியில் சேர்ந்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார். (உ)

## மொரார்ஜியை சந்தித்தனர்

புதுடில்லி, ஏப்ரல் 19

மாநிலங்களில் உள்ள காங்கிரஸாரைப் பெரும் பான்மையாகக் கொண்ட காங்கிரஸ் சட்டசபைகள் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர்கள்இன்று பிரதமர் திரு. மொரார்ஜிதேசாயைச் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தினர். (உ)

## அவசரநிலை நீக்கப்பட்டது

# பதுக்கல் காரர்களை பாதுகாக்க அல்ல!

## இந்தியப் பிரதமர் தேசாய் எச்சரிக்கை

புதுடில்லி, ஏப். 19

"அவசரகாலச்சட்ட விதிகளை அரசாங்கம் நீக்கியது அத்தியாவசிய உணவுப்பண்டங்களின் விலைகளை வர்த்தகர்கள் அதிகரித்து மக்களைத் துயரில் ஆழ்த்துவதற்காக அல்ல. இத்தகைய சமூக விரோத வர்த்தகர்கள் மீதும், பதுக்கல்காரர்கள்மீதும் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும்" என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

திரு. தேசாய் நேற்றிரவு வானெலி மூலம் நாட்டுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:

"கடந்த சில வாரங்களாக நாட்டில் அத்தியாவசிய உணவுப்பண்டங்களின் விலைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. அவசரகாலநிலை நீக்கப்பட்டது பதுக்கல்காரர்களையும், சட்டவிரோத வர்த்தகர்களையும் பாதுகாப்பதற்காக அல்ல.

'நாட்டுமக்களை கஷ்டத்தில் ஆழ்த்தமுற்படும் வர்த்தகர்கள் மீது சட்ட நடிவடிக்கை எடுக்கப்பட்டே தீரும்.

### போதிய கையிருப்பு உண்டு

செயற்கைத்தட்டுப்பாட்டை அரசாங்கம் அனுமதிக்காது. உணவுப் பொருட்கள் போதியளவு கையிருப்பில் உண்டு. அவசியமேற்படும் பட்சத்தில் உணவுப்பொருட்கள் இறக்குமதியும் செய்யப்படும்.

பொருட்களைப் பதுக்கி வைத்து நாட்டுமக்களை வாட்டுவது தேசத்துரோகமானது. (உ)

பிரிட்டன்

## மகாவலி அபிவிருத்திக்கு 60 டாலர் உதவும்?

கொழும்பு, செவ்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டவேலைக்கு பிரிட்டன் 60 கோடி அமெரிக்க டாலரைக் கடனுக வழங்குமென எதிர்பார்க்கப் படுகிறது.

இது தொடர்பாகபிரிட்டன் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது. இக்குழு சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்வையிட்டுவருகிறது.

இக்குழு நாடு திரும்பியதும் பிரிட்டன் இத் திட்டத்திற்கு அளிக்கவிருக்கும் உதவி ஊர்ஜிதப்படுத்தப்படும். (உ)

# 'ஏகாதிபத்திய, குடியேற்ற வாதத்தை பூண்டோடு அழிக்க சீனு போராடும்'

## கொழும்பில் திருமதி சூ. என். லாய்

கொழும்பு, செவ்வாய்

"இயற்கை அழிவுகளினுலும், தேசத்துரோகிகள் நால்வரினது செயல்களினுலும் சீனுவின் முன்னேற்றம் குறுகிய காலம் தடைப்பட்டிருந்த போதிலும் இப்போது ஸ்திரமான நிலை அங்கு நிலவுகிறது. மக்கள்ஒருமனதுடன் நாட்டின் அபிவிருத்திக்காக அயராது உழைத்து வருகின்றனர்" என்று திருமதி சூ-என்-லாய் கூறினர்.

"குடியேற்ற வாதத்தையும், ஏகாதிபத்தியத்தையும் பூண்டோடு ஒழித்துக்கட்ட சீனு தொடர்ந்து போராடும்" என்றும் அவர் சொன்னுர்.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் திருமதி சூ-என்-லாய் தலைமையிலான தூதுக்குழுவுக்கு பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா நேற்றிரவு பண்டாரநாயகா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் விருந்துபசாரம் அளித்துக்கௌரவித்தார்.

### இலங்கைக்கு சர்வதேச மதிப்பு உண்டு

இவ்வைபவத்தில் திருமதி சூ-என்-லாய் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இந்து சமுத்திரம் சமாதான பிராந்தியமாக சீன அரசு தொடர்ந்து ஆதரவளிக்கும். இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகாவின் சிறப்பான நடவடிக்கைகளினல் இலங்கை மிகுந்த அபிவிருத்தியடைந்துள்ளது. இலங்கை மக்களுக்கும், பிரதமருக்கும் சர்வதேச அரங்கில் நன்மதிப்பு உண்டு"

### பிரதமர் சிறிமாவோ உரை

திருமதி பண்டாரநாயகா இவ்வைபவத்தில் உரையாற்றுகையில், "சீனுவும், இலங்கையும் ஆசியாக்கண்டத்தில் சமாதானம் நிலைபெறவும், பொருளாதாரவளம் ஓங்கவும் பரந்த ரீதியில் செயற்பட்டுவருகின்றன.

இருநாடுகளுக்கும் இடையிலான சமாதான சகவாழ்வு மென்மேலும் வளர்வதற்கு இருநாடுகளும் வழிசமைத்துள்ளன.

இந்துசமுத்திரம் சமாதான பிராந்தியமாக சீனு அளித்துவரும் ஆதரவு பாராட்டுக்குரியது. இலங்கை-சீன நட்புறவின் உயர்சின்னமாக பண்டாரநாயகா சர்வதேச ஞாபகார்த்த மண்டபம் திகழ்கிறது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு சீனுஅளித்துவரும் உதவிகளும் பாராட்டுக்குரியன.

தலைவர்மாவோவும், தலைவர் சூ-என்-லாயும் மறைந்தது சீனுவுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

நம் இருநாடுகள் மத்தியிலான நட்புறவும் பரஸ்பர கலை, கலாச்சார தொடர்புகளும் மேன்மேலும் வளரவேண்டும் என நான் விரும்புகிறேன்" என்ருர்.

• • •

## கார் திருட்டு

மாத்தளை, செவ்.

இரவு வேளை வீட்டு வளவு ஒன்றினுள் நுழைந்த இனந்தெரியாத எழுவர் கொண்ட கோஷ்டி ஒன்று 50,000 ரூபா பெறுமதிமிக்க கார் ஒன்றைத் திருடிச்சென்றுள்ளதாக மாத்தளை பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

முனசிங்க சுமணதாஸ என்பவரே தமது மேற்படி கார் திருடப்பட்டு விட்டதாக புகார் செய்துள்ளவராவார். (உ)

## இரு சிறுவர் தப்பியோட்டம்

ஹோமகம, செவ்.

பன்வில சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் இருந்து இரு சிறுவர்கள் தப்பியோடிவிட்டனர்.

பி. சந்திரசிறி (12 வயது), ஷரத்பந்துல பிரேமா (13 வயது) என்ற மேற்படி இரு சிறுவரையும் பொலிசார் தேடி வருகின்றனர். (உ)

• • •

## காரில் வந்து கொள்ளை

எல்ல, செவ்.

கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபடுத்தப்பட்டதாகக் கூறப்படும் கார் ஒன்றை எல்ல பொலிசார் தேடி வருகின்றனர்.

சம்பவதினம் மாலை தெமோதற சந்திக்கருகில் நால்வர் அடங்கிய கோஷ்டி ஒன்று குறிப்பிட்ட காரில் வந்து அவ்விடத்தில் நின்று கொண்டிருந்த இவரது பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாம். (உ)

றொடீஷிய விவகாரம்:

# "சமரஸப் பேச்சுவார்த்தை பயன்தரப் போவதில்லை" — பிரி வெளிநாட்டமைச்சர்

லண்டன், ஏப். 19

"றொடீஷியாவில் சிறுபான்மை இனத்தவரான வெள்ளையரின் ஆட்சி அகற்றப்பட்டு பெரும்பான்மை இனத்தவரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட சமாதானப் பேச்சுவார்த்தைகள் பயனளிக்கும் என்ற நம்பிக்கை அற்றுப்போய்விட்டது" என்று பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் திரு. ஓகன் கருத்துவெளியிட்டுள்ளார்.

ஆயுதப்போராட்டம் மூலமே பெரும்பான்மையினர் ஆட்சி அங்கு உருவாகும் என்று திரு. ஓகன் மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

திரு. இயன்ஸ்மித் றொடீஷியப் பிரதமராக இருக்கும் வரை சமாதானம் ஏற்பட முடியாது என்ற கருத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். (உ)

மத்திய கிழக்குப் பிரச்னை:

# 'சமாதானம் மலர மாஸ்கோ பேச்சுவார்த்தை உதவும்' — சிரிய ஜனதிபதி

மாஸ்கோ, ஏப். 19

"மத்தியகிழக்கில் நிலைமை மோசமான நிலையில்தான் இருக்கிறது. மத்திய கிழக்கில் சமாதானம் நிரந்தரமாக நிலைக்க எனது மாஸ்கோபேச்சுவார்த்தைகள் உதவியாகஇருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு" என்று சிரியா ஜனதிபதி அஸாத் தெரிவித்துள்ளார்.

தற்போது சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ள சிரியா ஜனுதிபதி சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவர் திரு. பிரஷ்னேவுடன் பேச்சுவார்த்தை நடத்திய போதே மேற்படி நம்பிக்கை தெரிவித்தார்.

சிரியா ஜனுதிபதி சோவியத் பிரதமர் கொஸிஜின், ஜனதிபதி பொட்கொர்ணி முதலானேரையும் சந்தித்துப் பேசுவார். (உ)

# நிராகரிக்கப்பட்டவர்களைச் சிந்தித்து குப்பையைக் கிளறவேண்டுமா?

'ஈழநாடு' விவாத மேடையில் தினமும் வெளிவரும் கருத்துக்களை மிகவும் உன்னிப்பாகக்கவனித்துவருகிறேன். நாம் இன்று ஒரு இலட்சியத்தின் அடிப்படையில், ஈழத் தமிழன் விடுதலைப் பாதையை நோக்கி மூதறிஞர் செல்வா தலைமையில் செல்லும்போது மாற்றுக் கட்சிக்காரரும் இன்று தமிழர் கூட்டணியுடன் ஒன்று சேர்ந்து அறப்போராட்டத்தில் ஈடுபடுவதற்கு தயார்நிலையில் இருக்கும்போது தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்ட தமிழ்த் தலைவர்கள் பற்றிச் சிந்தித்து மீண்டும் குப்பையைக் கிளறக் கூடாதென்றே எண்ணுகிறேன்.

ஆனால் 15-4-77 ஈழநாட்டில் ''கூட்டணியில் சேராத தமிழர்கள் எல்லோரும் தமிழ் விரோதிகளல்லர்!'' என்றகட்டுரையைப் படித்ததும் சில கருத்துக்களை எழுதவேண்டுமென்று எண்ணுகிறேன்.

தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐ. தே. கட்சி சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி முதலிய சிங்களத் தலைவர்கள் வழிநடாத்தும் கட்சிகளில் அங்கம் வகிக்கிறார்கள்.

தமிழரசுக்கட்சி, தமிழ்க் காங்கிரஸ்கட்சி, சுயாட்சிக் கழகம், ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணிபோன்ற கட்சிகளில் தமிழ்த் தலைவர்கள் தலைமை தாங்குகின்றார்கள்.

சிங்களத்தலைமையிலுள்ள கட்சிகள் மாறி மாறி அரசாங்கத்தை நடாத்தின. அப்படி அரசாங்கத்தை நடாத்திய போது தமிழ்த்தலைவர்களும் அவ்வப்போது ஒத்துழைத்தார்கள். ஆனால் அவர்கள் தொகை மிகவும் சொற்பமானதாகவே இருந்தது.

## தமிழ் மந்திரிகள் எத்தனை பேர்

1948-ல் 14 மந்திரிகளில் 3 பேர் தமிழ் மந்திரிகள். 1952-ல் 14-ல் இருவர் தமிழ் மந்திரிகள். 1953-ல் 13-ல் இருவர் தமிழ் மந்திரிகள். 1956-ல் 15 பேரில் ஒரு தமிழரும் இல்லை. 1959-ல் ஒரு தமிழமந்திரியும் இல்லை. 1960 மார்ச்சில் ஒருவரும் தமிழர் இல்லை. 1960 ஜூலை தேர்தலில் ஒருவரும் தமிழர் இல்லை. 1965-ல் 17 பேரில் தமிழர் ஒருவரே அமைச்சர். 1970லும் ஒரே ஒரு தமிழரே அமைச்சர் பதவியை வகிக்கின்றார். இதிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின் படிப்படியாக தமிழனுக்கிருக்கும் அரசியல் பங்கை அறிந்து கொள்ளலாம்.

தமிழ்மக்களைப் பொறுத்தவரை 3 பேரடிகள் பெரும்பான்மை என்ற போர்வையில் வீழ்ந்தன. முதலாவது பேரடி 20-8-48-ல் வீழ்ந்தது. மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பறிக்கும் இலங்கைக் குடியுரிமைச் சட்டமே அதுவாகும் இச்சட்டத்தை எதிர்த்து தமிழர் கூட்டணித் தலைவரும் அன்றைய தமிழ்க் காங்கிரஸ் எம். பியுமான மூதறிஞர் செல்வா பின்வருமாறு குறிப்பிட்டார்.

''இன்று இந்தியத் தமிழ் மக்களின் கழுத்தில் கத்தி வைக்கிறார்கள். நாளை இலங்கைத் தமிழ் மக்களின் கழுத்தில் கத்திவைப்பார்கள்'' அவரது தீர்க்கதரிசனம் இன்று எப்படி நிரூபிக்கப்பட்டிருக்கின்றதென்பதை தமிழ்மக்களுக்கு இரண்டாவது தலையடியான 1956 ஜூன் 5 சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேறியதன் மூலமும் 1972 மே மாதம் நிறைவேற்றிய அரசியல் திட்டம் மூலமும் அறியலாம்.

1949 மார்கழி 18-ந் திகதி மருதானை அரசாங்க லிகிதர் சேவைச்சங்க கூட்டத்தில் தமிழரசுக்கட்சி அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மூதறிஞர் ஒரு எச்சரிக்கையை விடுத்தார்.

## மூதறிஞர் கூறிய இரண்டு வழிகள்

''இப்போதைய அரசியல் திட்டத்தின்கீழ் சிங்களப்பிரதிநிதிகள், தமிழ்ப் பிரதிநிதிகள் எல்லோரையும் உதாசீனம் செய்து அவர்களது உதவி இல்லாமல் அரசாங்கத்தை ஆக்கவும் அவர்களது விருப்பத்திற்கும் உணர்ச்சிக்கும் மாறாக சட்டங்களை ஒன்றன்மேல் ஒன்றாக நிறைவேற்ற முடியுமென்பது இப்போது தெளிவாகிய பின் தமிழ்பேசும் மக்களுக்கு இரண்டுவழிகளே உள்ளன. ஒன்று நிபந்தனையற்ற சரணாகதி. மற்றையது தமிழ்பேசும் மக்களை அரசியல் உரிமைகளற்றவர்களாக்கும் இப்போதைய அரசியலமைப்பிலிருந்து மீட்பதற்காக ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பதாகும். பிந்திக்கூறிய வழி கடுமையானது. ஆனல் அதுவே வீரர்களுக்குரிய வழியாகும்.''

## புத்தொளி

அன்றுகூறிய செல்வாவின் கூற்றுக்கள் 27 ஆண்டுகளின் பின்னும் பசுமையாக-உண்மையாக இருப்பதை நாம் மறுக்கவோ மறைக்கவோ முடியுமா?

''தேர்தல் காலங்களில் அரசியலைப் பேயாட்டம் ஆட்டாது தமிழர்களுக்கு நிரந்தரமாக ஒரு அரசியல் விடுதலைக்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்ற அக்கட்டுரையாளரின் கூற்றை மேலும் ஆராயவேண்டும்.

தமிழரசுக்கட்சியோ ஆரம்பத்திலிருந்து இன்றுவரை அறப்போரில் ஈடுபட்டு சாத்வீக நடவடிக்கைகளை அரசாங்கத்திற்கெதிராக எடுத்துவந்ததை யாவரும் அறிவர். திரு. ச. ஞானமூர்த்தியின் முயற்சியால 7-2-71ல் தமிழர் தலைமையிலுள்ள கட்சிகள் அனைத்தும் சேர்ந்து வல்வெட்டித்துறையில் ஒன்பது அம்சக் கோரிக்கையைத் தயாரித்து அரசியல் நிர்ணயசபைக்கு அனுப்பியது.

இவர்கள் கோரிக்கையை 28-6-71-ல் அரசியல் நிர்ணய சபை நிராகரிக்கவே தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்து வெளியேறினர்.

தமிழர் அரசியல் கட்சிகள், மாணவர்இயக்கங்கள், மொழிவழித் தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து 14-5-72ல் திருக்கோணமலையில் தமிழர் கூட்டணியை உருவாக்கின.

## கூட்டணியின் 6 அம்சத் திட்டம்

தமிழர் கூட்டணி 25-6-72 அன்று 6 அம்சக் கோரிக்கை ஒன்றை உருவாக்கி அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தது. இதுசம்பந்தமாக 30-9-72க்கு முன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இன்றேல் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழின உரிமையை நிலைநாட்ட சாத்வீகப் போராட்டத்தில் இறங்குவதென அறிவித்தது.

புதிய அரசியல் திட்டத்தை தமிழ்மக்கள் ஏற்கவில்லை என்பதை நிரூபிக்க தேர்தலொன்றில் போட்டியிடத் தயாரெனத் தெரிவித்த கூட்டணித் தலைவர் செல்வா 3-10-72ல் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமாச் செய்தார்.

தமிழரசுக்கட்சியின் 12வது மாநில மாநாடு மல்லாகத்தில் கூடி தமிழர் கூட்டணியின் தன்னாட்சிக் கொள்கைக்குத் தனது ஒப்புதலை 8-9-73ல் அளித்தது.

தன் லட்சியத்தில் தமிழ்மக்கள் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள் என்பதை மூதறிஞரின் வெற்றிமூலம் தமிழர்கூட்டணி அரசுக்கும், அகில உலகத்திற்கும் நிரூபித்தது. மூதறிஞர் செல்வா தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட அரசு ஆதரவாளரை 16,470 அதிகப்படியான வாக்குகளால் தோற்கடித்தார்.

தமிழ் ஈழத் தீர்மானத்துக்கு ஆதரவாக லண்டனில் ஈழ விடுதலை முன்னணி, ஈழத்தமிழர்கழகம் ஆகியன ஆர்ப்பாட்டம் நடாத்தி இங்கிலாந்துப் பிரதமரிடம் மகஜரொன்றையும் கையளித்தன.

தமிழ் ஈழத்தின் விடுதலை நாளாக 4-2-76ல் தமிழ்பிரதேசமெங்கும் கொண்டாடப் பட்டது.

## பங்காளிகளாகவே இருந்துள்ளனர்

'கூட்டணியில் சேராதிருக்கும் தமிழர்கள் தமிழ்விரோதிகளல்லர்' என்பதன் கூற்றும் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும்.

அரசாங்கக் கட்சியிலிருக்கும் தமிழரும் ஐ.தே. கட்சியிலிருப்போரும் தமிழருக்கெதிரான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபோது பங்காளிகளாகவே இருந்திருக்கிறார்கள்.

ஐக்கியமுன்னணி அரசுபதவி ஏற்றபோது அப்போதைய நீதி அமைச்சர் 1970 ஜூன் 30-ந் திகதி தமிழ்மக்கள்பற்றி என்ன கூறினர்.

இந்தநாட்டைத் தமதாக்கிக் கொள்ளும்பொருட்டு எந்தப் படையெடுப்புச்சக்திகளை எதிர்த்துச் சிங்களவர் போரிட்டு வந்தார்களோ அந்த அந்நிய படையெடுப்பாளரின் சந்ததியினர்தான்இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள். எனவே நான் முறித்துச்சொல்லிவிடவேண்டியவனாயிருக்கிறேன். இப்போதுதமிழ் மக்களுக்குச் சலுகைகளை வழங்கச் சிங்களமக்களுக்குச் சம்மதமில்லை. சரிஎன்ன? பிழை என்ன? அதுதான் நிலைமை. அதை நாம் உண்மைஎன்றுஏற்றுக்கொள்ள வேண்டியது தான்.

ஐ. மு. அரசு ஆதரவாளர்களான தமிழர்கள் இக்கூற்றை எதிர்த்துப் போர்க்கொடிபிடித்தார்களா?

கடைசியாக இருந்த சிங்கள-தமிழ் உறவுகளை முற்றாகத் துண்டித்தது தரப்படுத்தல் முறையேயாகும். தமிழ்மாணவனின் கழுத்தில் கத்திவைத்த செயல் இது என்பதைச் சரித்திரம் கூறும்.

சிங்களமக்களுடைய இனவாதம், சிங்கள அரசாங்கத்தின் இனவாதம், கல்விஅமைச்சில் செறிந்து தமிழ மக்களை இன்று தனிநாடு கேட்குமளவிற்குத் தள்ளிவிட்டது.

200 முஸ்லிம் மாணவர்கள் சிங்களம்கற்று ஆசிரியர்களாக சிங்களப் பாடசாலைகளுக்குச் சென்று அவர்கள் ஏமாந்து அங்கு கற்பிக்க முடியாமல் திரும்பி வந்ததைச் சிறுபான்மை இனத்தவரான கல்வி அமைச்சர் அறிவார்.

1976ல் மொழிவழித் தரப்படுத்தலின்மூலம் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் 6 வளாகங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பட்டியலில் 3503 பேர் மும்மொழிகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிங்களமொழிமூலம் 2879 பேரும் தமிழ்மொழிமூலம் தெரிவானோர் 592 பேரும் (முஸ்லிம்களும் சேர்வர்) ஆங்கில மொழிமூலம் 32பேரும் மட்டும் தெரிவாகினர். கொழும்பு வளாகத்திலும் வித்தியாலங்கார வளாகத்திலும், பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம் ஆகியவற்றுக்கும் ஒரு தமிழ்மாணவனும் தெரிவுசெய்யப்படவில்லை.

தமிழமைச்சர் முன்னிலையில் தேசிய அரசுப் பேரவையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. திரு. ஹெரத் தமிழ் மக்கள், சிங்களவர் இடும் பிச்சையைப் பெற்றுத்தான் வாழவேண்டுமென்று பேசியதையும் எவரும் மறுக்கமாட்டார்கள்.

தமிழர்கூட்டணியினர் தனித் தமிழ்நாடு காணும் இலட்சியப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். இக்கொள்கையை ஆதரிக்காத தமிழ்த்தலைவர்களுக்கோ, தமிழருக்கோ தமிழர் கூட்டணியில்இடமில்லை. இந்த இலட்சியப் பிடிப்புள்ள அத்தனைபேருக்கும் தமிழர் கூட்டணியில் சேர்ந்துழைக்கத் தடை எதுவும் என்றைக்கும் இருக்கமாட்டாது.

## தேர்தலைவைத்து பேயாட்டம் ஆடவில்லை

தமிழர் கூட்டணி என்றைக்கும் தேர்தலைவைத்துப்பேயாட்டம் ஆடியது இல்லை என்பதை மேலே எடுத்துக்காட்டியுள்ளேன்.

## விவாதமேடை

தமிழர் கூட்டணிஒன்று ஏற்பட்டபின் அதில் அங்கம் வகிக்கும் பல்வேறுகட்சிகளும் தமது தனித்துவத்தை இழக்கவேண்டும் என்று எதிர்பார்க்கமுடியாதுதான். ஆனல் தமிழர்கூட்டணி ஒரு அரசியல் கட்சியகா அங்கிகரிக்கப்பட்டபின் அனைத்துக்கட்சிகளும் தமிழர் கூட்டணி எனறே இயங்கவேண்டும்.

கட்சிகள் தமது கருத்துக்களை தொகுதிகேட்டுப் போராடுவதை, பத்திரிகை அறிக்கைகளில் தெரியப்படுத்துவது கூட்டணிபற்றி மற்றையோர் தப்பபிப்பிராயம் கொள்வதற்கு வழிசமைப்பதாகும். தமிழர் கூட்டணிப் பொதுச்சபைக்கு அல்லது செயற்குழுவுக்குத் தமது எண்ணக்கருத்துக்களைத் தெரிவித்து தம்பக்க நியாயங்களை எடுத்துக்காட்டி நீதி வேண்டி நிற்பது பிழையல்ல. செயற்குழுவின் முடிவை ஏற்று கூட்டணியின் இலட்சியத்திற்குப் பாடுபடுவதே கூட்டணித் தொண்டனின் கடமையாக இருக்கவும் வேண்டும்.

நடக்கவிருக்கும் எட்டாவது பொதுத்தேர்தலில் தமிழர்கூட்டணி ஈட்டஇருக்கும் பெரு வெற்றியின்பின் தமிழ்மக்கள் மத்தியிலிருக்கும் போலித் தலைவர்களும் பொம்மைக் கட்சிளும் இருந்தஇடம் தெரியாமல் மாய்ந்துவிடும்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, செவ்.

பொத்தலேகம எல்லுமிடத்தில் அதிஷ்டம் பார்க்கப்பட்ட 611-வது தேசிய சுவீப் முடிவில் பரிசு பெற்றமுதல் மூன்று டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:

1-வது பரிசு:

**35 H 0363**

ரூபா 100,000

2-வது பரிசு:

**05 J 0659**

ரூபா 40,000

3-வது பரிசு:

**29 J 0186**

ரூபா 10,000

தலா 500 ரூபா ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 28 A 0508 | 32 A 0084 |
| 37 A 0230 | 17 B 0521 |
| 32 B 0507 | 07 C 0666 |
| 09 C 0846 | 24 C 0735 |
| 39 C 0555 | 40 C 0096 |
| 02 D 0643 | 18 D 0656 |
| 29 D 0457 | 34 D 0791 |
| 39 D 0694 | 09 E 0619 |
| 12 E 0894 | 17 E 0732 |
| 25 E 0311 | 25 E 0439 |
| 28 E 0782 | 40 E 0389 |
| 40 E 0577 | 01 F 0782 |
| 05 F 0972 | 23 F 0698 |
| 37 F 0482 | 06 G 0125 |
| 23 G 0558 | 12 H 0109 |
| 25 H 0933 | 27 H 0956 |
| 38 H 0381 | 18 J 0567 |
| 22 J 0688 | 23 J 0919 |
| 34 J 0472 | 10 K 0719 |
| 16 K 0060 | 21 K 0219 |
| 25 K 0211 | 04 L 0056 |
| 13 L 0908 | 17 L 0781 |
| 08 M 0139 | 18 M 0450 |
| 24 M 0496 | 35 M 0457 |
| 16 N 0671 | 26 N 0028 |
| 05 O 0022 | 08 O 0726 |
| 28 O 0423 | 29 O 0449 |
| 36 O 0575 | 11 P 0340 |
| 26 P 0563 | 30 P 0069 |
| 09 Q 0954 | 11 Q 0983 |
| 19 Q 0086 | 32 Q 0598 |
| 36 Q 0414 | 11 R 0489 |
| 16 R 0550 | 16 R 0801 |
| 21 R 0529 | 23 R 0285 |
| 23 R 0825 | 35 R 0957 |
| 40 R 0234 | 02 S 0034 |
| 13 S 0656 | 27 S 0810 |
| 32 S 0243 | 23 T 0457 |
| 36 T 0369 | 38 T 0354 |
| 13 U 0820 | 26 U 0374 |
| 02 V 0951 | 04 V 0713 |
| 12 V 0760 | 13 V 0135 |
| 36 V 0670 | 37 V 0170 |
| 37 V 0749 | 38 V 0471 |
| 05 W 0253 | 07 W 0185 |
| 08 W 0751 | 16 W 0350 |
| 25 W 0830 | 17 X 0510 |
| 24 X 0021 | 24 X 0996 |
| 26 X 0784 | 29 X 0016 |
| 37 Y 0587 | 25 Z 0871 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்) [ஆ]

## ஒருநாள் வேலைநிறுத்தம் செய்தனர்

மாவிட்டபுரம், செவ்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் அண்மைக் காலத்தில் நடைபெற்றிராத முறையில் நேற்று நடைபெற்ற ஒருநாள் அடையாள வேலைநிறுததத்தில் தொழிலாளர்கள் உத்தியோகத்தர்கள், பாதுகாப்புச்சேவையாளர்கள் யாவரும் கலந்து கொண்டதால் தொழிற்சாலை வேலைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்ததுடன் தொழிற்சாலைப் பாதுகாப்புக்காக ஆயுதம்தாங்கிய பொலிசார் வரவழைக்கப்பட்டுக் கடமையில் ஈடுபட்டனர்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் உத்தியோகத்தர்கள் யாவரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 10 தொழிற்சங்கங்கள் தமது 14கோரிக்கைகள் குறித்து இலங்கை சீமெந்துக்கூட்டுத் தாபனத் தலைவரிடமும், காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலை நிர்வாகத்திடமும் எடுத்துக்கூறியும் அவர்கள் அசிரத்தையாக இருந்ததாகத் தெரிவித்துத் தொழிற்சங்க நடவடிக்கையாக ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்ததென முடிவுசெய்தன. (அ)

## சம்பந்தர் ஆதீனத்தில் தெய்வீக மாநாடு

யாழ்ப்பாணம், புதன்

நல்லை ஞானசம்பந்தர் ஆதின வருடாந்தத்திருநெறிய தெய்வீக மாநாடும், ஞான சம்பந்தப் பெருவிழாவும் இம்மாதம் 22 ந் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து மே முதலாந்திகதிவரை இது நடைபெறும்.

முதலாவது நாள் பண்ணிசை அரங்கில், பண்ணிசைப் புலவர் திரு. எஸ். ஆர் திருஞானசம்பந்தன் பண்ணிசைக் கச்சேரி செய்வார். (ஈ)

ராஜா (யாழ். நகர்)
ஏ.வி.எம்.ராஜன் - சாரதா
முத்துராமன் - நாகேஷ்
[தினசரி 4 காட்சிகள்]

துலாபாரம்

(தமிழ் – புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி (இருவேடம்) ஜெயலலிதா சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த

பாட்டும் பரதமும்

(ஈஸ்ட்மன் கலர்)

11 வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த

இதயக்கனி

(ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA) Daily at 4-45,7-00&9-30p m. only
For All Good Children From 8 to 80!
"C I R C U S"
(A Full Length Circus Film) (Color)

RIO (Jaffna) Daily 4 Shows
DYNAMITE JACK

வெலிங்டன் [யாழ். நகர்]
முத்துராமன் சுஜாதா
நடித்த
தினசரி 4 காட்சிகள்

வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 சிவாஜி,ஜெயலலிதா
[யாழ். நகர்] தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.

தெய்வமகன்

22-4-77 முதல்

சொர்க்கத்தில் திருமணம்

தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ்நகர்]
ஏ.வி.எம்.ராஜன்-காஞ்சன
நடித்த

வீர அபிமன்யு

29-4-77 முதல்
புரட்சித் தலைவரின் மகத்தானபடைப்பு

நாளை நமதே

தினசரி 4 காட்சிகள்
வின்ஸர் (யாழ். நகர்)
எம். ஜி. ஆர். — பானுமதி
நடித்த

மதுரை வீரன் (புதிய பிரதி)

22—4—77 முதல்
சிவாஜி கணேசன் (இரு வேடங்களில்)
நடித்த

மனிதனும் தெய்வமாகலாம்

(கலர்)


THE JAFFNA ACADEMY
VACANCY FOR TEACHERS

Graduates or Graduands for Advanced-Level work in Botany, Zoology and Chemistry. Only those who can do this work with confidence apply to The Director before 30th April 1977.

Those completing the degree this year at the University can also apply. Retired teachers also can apply.

Director.

376, Main Street,
Chundikuli, Jaffna.
Phone No. 617.

5913

மாநகரசபை,
யாழ்ப்பாணம்

## பகிரங்க ஏல விற்பனை

யாழ். கச்சேரி இ. போ. ச. பஸ் தரிப்பு நிலையத்திற்கண்மையில் உள்ள மகோக்கனி மரம் ஒன்று 25-4-77 ஆம் திகதி மு. ப. 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப் படும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி மரத்தை 3 நாட்களுக்குள் வெட்டி அப்புறப்படுத்தவேண்டும்.

க. சிவஞானம்
மாநகராட்சிமன்ற
ஆணையாளர்.

மாநகராட்சிமன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1-4-77. 5905

## ஆதனவரி அறிவித்தல்

நகராட்சி மன்றம்
சாவகச்சேரி

1977-ம் ஆண்டு 1-ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரி செலுத்துவதற்கு 29-04-1977-ம் திகதிவரை காலநீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. இத் திகதிக்குள் செலுத்தத் தவறியவர்களின் ஆதனவரியுடன் பத்துவீதம் பற்றுணைப் பணமும் சேர்த்து அறவிடப்படுமென்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

அன்ரன் அல்பிரட்.
விசேட ஆணையாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
18-04-1977. 5953


வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
கோமாளிகள்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-நிர்மலா
வீட்டுக்கு வந்த மருமகள்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
எஸ். எஸ். ஆர்
சரோஜா தேவி
தேடி வந்த செல்வம்


# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் 6 பரப்புக் காணி புதிய பெரிய வீட்டுக் கட்டடத்துடன் விற்பனைக்குண்டு. கிணறு, மின்சாரவசதியுண்டு. நேரிலோ கடித மூலமோ தொடர்புகொள்ளவும். — நா. செல்வரட்ணம், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 5954

### தேவை

சேலை அச்சடிக்கப் (Textile Printing) பழகி வேலை செய்வதற்கு பெண்பிள்ளைகள் உடனடியாகத் தேவை. நிலையத்துக்கு அண்மையிலிருப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். பயிற்சிக்காலத்திலும் வேதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். வசந்தா ரெக்ஸ் ரயில்ஸ், 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 5943

தோட்டத்தில் தங்கியிருந்து வேலை செய்ய தென்னந் தோட்ட வேலை அனுபவம் உள்ள மூன்று குடும்பங்கள் தேவை. தொடர்புகொள்ளவும்: சி. நா. நடராஜா, தட்டுவன் கொட்டி தோட்டம், பளை. 5952

### பயிற்சி

வெளிநாடுகளில் எமது சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. வெல்டிங் Electric Arc & Gas (மூன்று மாதம்) இலெக்றிக் வயறிங் (மூன்று மாதம்) ரேடியோ Transistor Technology (ஆறுமாதம்) ஒரே கட்டிடத்தில் Theory & Practicals. ஆங்கிலப் படிப்பு இலவசம். எமது NIET டிப்ளோமா பெற்ற பலர் வெளி நாடுகளில் வேலை பார்க்கிறார்கள். National Institute of Engineering Technology மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5929

### தேவை

பெண்களின் நவநாகரீக ஆடைகள் வெட்டித் தைக்கவும், பூப்போடவும் தெரிந்த பெண்கள்உடனே தேவை. இம் மாதம் 30-ந் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். செல்வம் ரெயிலறிங், பெற்ரோல் செற்றடி, வல்வெட்டித்துறை. 5949

### கல்வி

G. C. E. O. L. விஞ்ஞானம், வர்த்தகம், கலைவகுப்புக்கள் 19-4-77 காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். A.L. விஞ்ஞான வகுப்புக்களும் I. C. M. A. வகுப்புக்களும் 23-4-77 மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும். I. C. M. A. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் நடைபெறும். A.L. விஞ்ஞானவகுப்புக்கள் கிழமை நாட்களில் 4 மணிக்குப் பின்னர் நடைபெறும். சுருக்கெழுத்து, தட்டச்சு, சிங்களம், ஆங்கில வகுப்புக்களும் 19-4-77ல் ஆரம்பமாகும். யாழ்ப்பாணக் கல்விநிலையம், 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சாந்தி படமாளிகைக்கு முன்னால் உள்ளது). 5951

## வர்த்தகரீதியில் அமைப்பு

லண்டன், ஏப். 19

ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் வர்த்தக ரீதியிலான அமைப்பு ஒன்றினை ஏற்படுத்திக்கொள்ள விருக்கின்றன.

இந்த அமைப்பு பிரேஸிலில் உருவாகும் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (உ)


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
வழ. இல. M B 12026

ஊர்காவற்றுறை கரம்பன் கிழக்கு 1. நப்பியல்பிள்ளை குசைப்பிள்ளையும் 2. நப்பியல்பிள்ளை சேவையரும்

வாதிகள்

எதிராக

வேலணை மேற்கு தற்போது 240 பிரதான வீதி, நீர்கொழும்பு.

1. கணபதிப்பிள்ளை கந்தசாமியும் 2. மனைவி அழகேஸ்வரியும்

பிரதிவாதிகள்

M B. 12026-ஆம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க் காணும் ஆதனங்கள் 1977-ம் ஆு மே மாதம் 12 உ (12-5-77) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அவ்வவ் வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப் படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபா 6050/-மேலும் இதில் 5500/- ரூபாவுக்கு 25-9-70 தொடக்கம் 15-12-71 வரை வருடமொன்றுக்கு 12% வீத வட்டியும் அதன் பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 646/- பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும் வழக்குச் செலவில் 150/- ரூபா கழித்து மிகுதி

### ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதி, ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று. சரவணை இறை தற்போது வேலணைக் கோயிற்பற்று வேலணை மேற்கிறை 'வெள்ளைப் புலம்' நெற்பரப்பு 8. குளி 2 கிழக்குப் பக்கமாக நெற்பரப்பு 4 குளி 1 கிணறும், எல்லை கிழக்கும் தெற்கும் இவ்வாதனத்துக்கும் வேறு பல ஆதனங்களுக்குமுரிய 8 முழ அகலங் கொண்ட ஒழுங்கை வடக்கு ஒழுங்கை மேற்கு துரையப்பா கைம்பெண் விசாலாட்சிக்குரிய மிகுதியாதனம் இதடங்கலும். ஆனால் குறித்த கிணற்றில் இதன் மிகுதிக் காணிக்குரிய தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கல்.

2. ஷெ ஊர்காவற்றுறை கோயிற்பற்று கரம்பன் இறை 'இராசகண்டன்!' நெற்பரப்பு 20 எல்லை கிழக்கும் தெற்கும் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலாதனம் வடக்கு சு. இராசையா பெண் அன்னபூரணத்திற்கும் மறுபேருக்குமுரியவாதனங்கள் மேற்கு அரசரெத்தினத்தின் மனைவியினுதனம் இதடங்கலும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
விலை மதிப்பாளர்,
ஏல்விற்பனவாளர்.

''இராசகிரி''
643, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

5950

ஈழநாடு
The EELANADU

தீவிர அரசியலில் இருந்து

# திருமதி காந்தி சிறிது காலம் ஒதுங்கியிருக்க வேண்டும்

## முன்னாள் மத்திய மந்திரி கருத்து

புதுடில்லி, ஏப். 19

''காங்கிரஸ் கட்சி லோக் சபா தேர்தலில் தோல்வி யடைந்ததில் தனக்குள்ள பங்கைத் தட்டிக்கழித்துவிட திருமதி இந்திராகாந்தியால் முடியாது'' என்று முன்னாள் மத்திய சட்டத்துறை அமைச்சர் செய்யது முகம்மது கூறினார்.

கோழிக்கோட்டில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர், 'திருமதிகாந்தி தீவிர அரசியலில்' இருந்து சிறிதுகாலம் ஒதுங்கி இருப்பதே நியாயம்'' என்றார்.

இதேவேளை, ''பகைமை உறவை மறந்து காங்கிரஸ் கட்சி தற்போதுள்ள நிலையில் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள ஜனதா ஆட்சியுடன் தீவிரமாக ஒத்துழைக்கவேண்டும்'' என்று மற்றொரு முன்னாள் மத்திய அமைச்சரான காடில்கார் கருத்துவெளியிட்டுள்ளார். (உ)

இளைஞர் பேரவைக் குழுவினர்

# வவனியா சிவாவை இன்று சந்திப்பர்

யாழ்ப்பாணம், புதன்

அரசியல் பிரச்னைகள்மற்றும் தேர்தல் தொடர்பான விஷயங்கள் தொகுதிப் பிரச்னைகள் தொடர்பாக தமிழ் இளைஞர் பேரவைகுழு இன்று மாலை, தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. தா. சிவசிதம்பரத்தை வவனியாவில் சந்திந்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கிறது.

சிறைமீண்ட வண்ணை ஆனந்தன் தலைமையில் இக்குழு இன்றுகாலை வவனியா செல்லும் எனத் தெரியவருகிறது. வவனியா முல்லைதீவுத் தொகுதிகளில், இளைஞர் பேரவைக்கிளைகள் அமைப்பது பற்றியும் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது பற்றியும் இவர்கள் கலந்தாலோசிப்பார்கள் என்றும் தெரியவருகிறது.

வவனியா, முல்லைத்தீவு, தொகுதிகளில் உள்ள அரசியல் நிலைமைகள் பற்றியும் ஆராய்வார்கள் என்றும் தெரியவருகிறது.

சிலதினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவில் இளைஞர் பேரவைக்கிளை அமைக்கப்பட்டது. வண்ணை ஆனந்தனும்' மாவை சேனாதிராசாவும் இக்கிளையை ஆரம்பித்து வைத்தார்கள். இக்கூட்டத்தில் பெருந்தொகையான இளைஞர்கள் கலந்து கொண்டார்கள்

முல்லைத்தீவுத் தொகுதியில் மற்றும்பல இடங்களிலும், கிளைகள் அமைப்பதற்குப்பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ)

## தேவை

அச்சக வேலையில் பயிற்சிபெற ஆர்வமும், துடிப்பும் உள்ள G. C. E. (O/L) N. C. G. E. படித்த 21 வயதிற்குஉட்பட்ட இளைஞர்கள் தராதரப்பத்திரப் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 7707
C/o ஈழநாடு லிமிட்.
யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள அச்சக நிறுவனம் ஒன்றுக்கு அச்சுத்தொழிலில் அறிவும், அனுபவமும் உள்ள

- கம்பஸிட்டர்கள்
- பிளேட்டன் மைன்டர்கள்
- சிலின்டர் மைன்டர்கள்
- பைன்டர்கள்

அனுபவத்தைக் குறிப்பிட்டு தராதர, நற்சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பரஇல: 7707
C/o ஈழநாடு லிமிட்.
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna; Telegrams Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in SriLanka.

கிருமிநாசினி மூலம்மயக்கம்

# மாற்று மருந்தின்றி போராடும் 40 உயிர்கள்

## யாழ். ஆஸ்பத்திரியில் அவலம்

யாழ்ப்பாணம், புதன்

தோட்டப்பயிர்களுக்கு கிருமிநாசினி தெளிக்கும் போது மயக்கமுறுபவர்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மட்டும் தினமும் சுமார் 40 பேர் அறிவிழந்த நிலையில் அனுமதிக்கப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டிலுள்ள கோப்பாய், நீர்வேலி, உரும்பராய், சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, மண்டைதீவு, வேலணை மற்றும் கிளிநொச்சி போன்ற பகுதிகளிலிருந்து தினமும் 40 பேர்மட்டில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அறிவிழந்த நிலையில் அனுமதிக்கப்பட்டு வருகிறார்கள்.

மருந்துதெளிக்கும்போது அதிக வெப்பம் காரணமாக மனித உடலில் வியர்வை அதிகரிப்பதாகவும், வியர்வைத் துவாரம் ஊடாக மிகஇலகுவில் கிருநாசினி காற்றுடன் உட்புகுந்து மருந்து தெளிப்பவரை மயக்க நிலைக்கு உள்ளாக்க நேரிடுகிறது எனவைத்திய வட்டாரங்கள் கருதுகின்றன. முன்னெப்பொழுதும் இல்லாதவாறு யாழ்ப்பாண சரித்திரத்தில் பெருந்தொகையானோர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுவருவதால் டாக்டர்களும் செய்வதறியாது திகைக்கின்றனர்.

கிருமிநாசினி குடிப்பவர்களுக்கும், கிருமிநாசினி தெளிக்கும்போது மயக்கமடைபவர்களுக்கும்ஏற்றப்படுகின்றமாற்று ஊசி மருந்து (P. A. M அன்றி டோற்) யாழ் ஆஸ்பத்திரியில் மட்டுமன்றி வெளியில் தனியார் மருந்துச் சாலைகளிலும் பெறமுடியாதிருப்பதால் பெரும் கஷ்டம் நிலவுவதாகச் சொல்லப்படுகிறது. இதனால் டாக்டர்கள் செய்வதறியாது மரணவேதனையுடன் போராடும் பாதிக்கப்பட்ட விவசாயிகளை காப்பாற்றுவதில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்டமருந்தை கைவசம் வைத்திருக்கும் யாராவது உடனடியாக யாழ். ஆஸ்பத்திரிக்கு இந்த மருந்தைக்கொடுத்து நோயாளர்களை காப்பாற்றுமாறு ஆஸ்பத்திரி வட்டாரம் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த மருந்துத் தட்டுப்பாடு காரணமாக நேற்றுப்பிற்பகல் அனுமதிக்கப்பட்ட பலர் இச்செய்தி எழுதிக்கொண்டிருக்கும் வேளையில் உயிருடன் போராடிக் கொண்டிருந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் கூறின.

காலை 9 மணிக்கு முன்பாக விவசாயிகள் பயிர்களுக்கு கிருமிநாசினியைத் தெளிப்பதின் மூலம் அதிக உஷ்ணத்தால் ஏற்படும் வியர்வையைத் தவிர்த்து மயக்கமடைவதிலிருந்து ஓரளவு தப்பித்துக் கொள்ளலாம் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். (நெல்–ஆ)

# மிளகாய், வெங்காயத்தில் புதுவித புழு! விவசாயிகள் தவிப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிளகாய் பயிரில் கண்டுள்ள புதுவித புழு காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்ட மிளகாய்க் கன்றுகள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இம்முறை யாழ்ப்பாண விவசாயிகள் லட்சக்கணக்கான ரூபாவை இழக்கும் நிலையில் உள்ளனர்.

விவசாயப்பகுதி இந்த நோய்க்குரிய மருந்துகளை சிபார்சு செய்வதில் அக்கறை காட்டவில்லை என்றும், இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இது இப்படியிருக்க வலி-கிழக்குப் பகுதியில் வெங்காயப்பயிர்களில் புழுக்கள் பெருமளவில் காணப்படுவதாகவும், இவற்றை நீக்குவதற்கு லனேற் அற்றலிக், செவின் போன்ற மருந்துகளை செறிவு கூட்டி மாலை நேரத்தில் தெளிக்குமாறு வலி-கிழக்கு விவசாய போதனாசிரியர் திரு. அ. யோகலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சுழற்சி முறைப் பயிர்ச் செய்கையை கையாளுவதன் மூலம் இவ்வித நோய்களினால் அடிக்கடி ஏற்படும் பாதிப்பை தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் திரு. யோகலிங்கம் தெரிவிக்கிறார். இது சம்பந்தமான ஆலோசனைகளை அவ்வப் பகுதி விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களிடம் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்படுகிறது.

### இன்று மாநாடு

இது இப்படியிருக்க யாழ். அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபாலா தலைமையில் இன்று காலை 8 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர்கள் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்கள் விவசாய கிருமிநாசினி இறக்குமதியாளர்கள் விவசாய கிருமிநாசினி விற்பனையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு புதுவித நோய்கள் பற்றி ஆராய்வர். (அ)

# நெடுஞ்செழியன் முடிவில் மாற்றமில்லை

சென்னை, ஏப். 19

திராவிடமுன்னேற்றக் கழகத்திலிருந்து தாம் ராஜினாமாச் செய்த முடிவில் எவ்வித மாற்றமும் இல்லைஎன்று முன்னாள் தி. மு. க. பொதுச் செயலாளர் நாவலர் இரா நெடுஞ்செழியன் சென்னையில் கூறினார்.

தாமும் தமது சகாக்களும் அமைக்கவிருக்கும் புதிய கட்சி பற்றிவிரைவில் அறிவிக்கப்படும் என்றும் சொன்னார்.

சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய தி. மு. க. வலைவர் கலைஞர் மு. கருணாநிதியும் பேராசிரியர் அன்பழகனும், நாவலர் நெடுஞ்செழியனை ராஜினாமாவை வாபஸ்பெறுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

நாவலரை மட்டுமே ராஜினாமாவை வாபஸ்பெறுமாறு இவர்கள் கேட்டிருந்தனர்.

அவருடன் ராஜினாமாச் செய்த ராஜாராம் மாதவன், ஆதித்தன் ஆகியோருக்கு இத்தகைய வேண்டுகோளை கலைஞரும், பேராசிரியரும் விடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மூதறிஞர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரிவட்டாரங்கள்தெரிவித்தன.

கடந்த 29 தினங்களாக மயக்கமுற்ற நிலையில் சிகிச்சை பெற்றுவரும் செல்வாவுக்குப் பார்வை திரும்பக்கூடிய அறிகுறிகள் காணப்படுகின்றன. கைகால்களிலும் அசைவுகள் காணப்படுகின்றன.

மின்னொளிக்குக் கவனத்தை ஈர்க்கும் நிலைமை இன்னும் ஏற்படவில்லையென்றும் அருகில் ஏற்படும் ஓசைகளைச் சிறிதளவு அவதானிக்கக்கூடிய உணர்வு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நாசித்துவாரம் மூலம் தொடர்ந்து நீர்ப்பதார்த்தங்கள் கொடுக்கப்பட்டுவருகிறது. [க–அ]

### அளவெட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை நடாத்திய மல்லாகம் நீதவான் திரு. யேசுரட்ணம் கொலை எனத் தீர்ப்பளித்தார்

யாழ். சட்ட வைத்திய அதிகாரி திரு. சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடாத்தினார்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபர் திரு. ஏ. ஏ. எஸ். சில்வா ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

சிறுபிள்ளைகள் சச்சரவு துப்பாக்கிச் சூட்டில் முடிந்ததாக விசாரணையில் தெரியவந்தது. (ஆ)

### இன்று இலவச ஆலோசனை

நல்லூர், புதன்

விவசாயிகளின் நலன்கருதி விவசாயப் பயிர்களைத்தாக்கும் நோய்களைப்பற்றியும் அவற்றை மாற்றுவதற்கான வழிமுறைகள் பற்றியும் விரிவான இலவச ஆலோசனையை யாழ்ப்பாணம் ரோறு ஸ்தாபன விவசாயப் பகுதியினர் இன்று மாலை தமது ஸ்தாபனத்தில் வைத்து வழங்கவுள்ளனர்.

இவ்வாலோசனைகளை பிரபல்யம் பெற்ற கம்பெனிகளைச் சேர்ந்த நிபுணர்கள் விவசாயிகளுக்கு வழங்குவர். (அ)

### யாருடைய திறப்பு கோர்வை

யாழ் கோர்ட்டடியில் சிறு திறப்புக் கோர்வையொன்று கண்டெடுக்கப்பட்டு உடையார் ஒழுங்கையைச் சேர்ந்த வ. பாலசிங்கம் என்பவரால் ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலயத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம். (ஆ)